பக்கங்கள்: 10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 09 செவ்வாய்க்கிழமை 26.10.2021 கதிர் 355

**இது ரகசியம் அல்ல!**

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்தும்படி இந்தியாவிடம் தமிழர் தரப்புகளின் ஒற்றுமைப்பட்ட கோரிக்கை ஒன்றை முன் வைத்தல் என்ற பெயரில் ஒரு முயற்சி

பக்கம்02

## சாவு எண்ணிக்கை சடுதியாக உயர்வு



இலங்கையில் மேலும் 29 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

2

## இரவு நேரப் பயணத் தடை நீக்கம்!



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலின் காரணமாக இரவு 11 மணியிலிருந்து அதிகாலை 4 மணி வரை அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத் தடை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன இதனை அறிவித்துள்ளார்.

இரவு நேரப் பிரயாணத் தடை நீக்கப்பட்டாலும் சுகாதார நடைமுறைகள் அமுலில் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்று நிலைமையை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு மக்களின் பங்களிப்பு அவசியம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அரசை விமர்சிப்பதை உடனே நிறுத்துங்கள்

## ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கு கோட்டா கண்டிப்பான உத்தரவு



**அரசுக்குள் முரண்பாடுகள் இருக்குமாக இருந்தால் அதனை உள்ளேயே தீர்த்துக்கொள்ளுங்கள். வெளியில் விமர்சிப்பதை உடனடியாக நிறுத்துங்கள்.**

**- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

**ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஆளுங் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.**

10

## அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின் பெரும் போராட்டம்!

### இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை




அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கும் அதேவேளை புதிய முறைமையில் இனி தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம். சகல மாணவர்களுக்கும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

2

## 2022 முதல் டிஜிட்டல் அடையாள அட்டை

உலகிலேயே அதியுயர் தொழில்நுட்பம் வாய்ந்த டிஜிட்டல் தேசிய அடையாள அட்டையை அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்குள் அறிமுகப்படுத்தத் தயார் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலகைக் கையாள்வதில் இலங்கை நவீனமயமாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

2

## எரிபொருள் பற்றாக்குறை என்று எதிரணியே பரப்புகின்றது வதந்தி

### ஆளும் கட்சி குற்றச்சாட்டு



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை செயற்கையானது என ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் பொய்யான பிரசாரத்தை நம்பி, பொதுமக்கள் தேவைக்கு

2


## நாடாளுமன்றத்தில் கொரோனாத் தொற்றுடன் இரண்டு நாள்கள் நடமாடியுள்ளார் கஜேந்திரன்

### படைக்கல சேவிதர் நரேந்திர தகவல்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கடந்த வாரம் இரண்டு நாட்கள் நாடாளுமன்றத்துக்குச் சென்று சில இடங்களில் நடமாடியுள்ளார் என்று சி.சி.ரி.வி. காட்சிகள் மூலம் நடத்தப்பட்ட பரிசோதனையில் தெரியவந்துள்ளது என நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

10

## மன்னாரில் அதானி



இந்தியாவின் கோடீஸ்வரரும், பிரதமர் நரேந்திர மோடிக்கு நெருக்கமானவருமான அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

அதானி குழுமம் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்திக்கான

10

## கனேடியத் தூதரகத்தின் அதிகாரிகள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம்

கனேடியத் தூதரக அதிகாரிகள் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டனர்.

கனேடிய அரசின் நிதி அனுசரணையுடன் இலங்கையிலுள்ள நான்கு பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழகத்தின் திட்ட மேம்பாடு குறித்து ஆராய்வதற்காகவே

2



## இனி இது ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோவின் முன்னெடுப்பில் மேற் கொள்ளப்படுகின்றது. ஒற்றுமை முயற்சி என்பது அதன் யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்து கொண்டு முன்னெடுக்கப்பட வேண் டிய ஒன்று. ஒவ்வொருவரும் தத்தமது அரசியல் சுய நலன்களுக்கான சித்து விளையாட்டாக அதனை முன்னெடுக்கக் கூடாது; முன்னெடுக்க முடியாது.

13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தக் கோரும் விவகாரம் ஏற்கனவே புதுடில்லியினால் உத்தியோக பூர்வமாகவே - வெளிப்படையாகவே - பல தடவைகள் இலங்கைக்குக் கூறப்பட்டு விட்டது. இனிமேல்தான் அதனை தமிழர் தரப்பு தன்னுடைய ஒற்றுமைப்பட்ட நிலைப்பாடாக வலியுறுத்தி இந்தியாவை வழிப்படுத்த வேண்டும் என்பதில்லை. அந்தத் தேவைப்பாடு புதிதாக எழவில்லை.

ஆனாலும் கூட அப்படியொரு கோரிக்கையை முன்வைப்பது என்றாலும் கூட அதில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளை அழைக்காமல் அல்லது அவர்களோடு கலந்துரையாடாமல், இத்தகைய ஒற்றுமை முயற்சி என்ற பெயரில் கூத்து நடத்துவது அர்த்தமற்றது.

சரியோ, பிழையோ கடந்த ஒரு தசாப்த காலத்திதற்குமேல் இவ்விடயங்களில் தமிழர் தரப்பின் பிரதான பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே கருத்தில் எடுத்து, அதற்குத்தான் இந்தியா - புதுடில்லி தலைமை - முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறது. கூட்டமைப்பிலும் குறிப்பாக சம்பந்தனுடன்தான் இந்த ஊடாட்டத்தை பிரதமர் மோடியில் இருந்து புதுடில்லி நிர்வாகம் வரை சகல தரப்புகளும் மேற்கொண்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் இத்தகைய கோரிக்கை ஒன்றை முன்வைக்கும் முயற்சியை ஒற்றுமையாக முன்னெடுப்பது என்றால் - தமிழர் தரப்பின் ஐக்கியப்பட்ட எதிர்பார்ப்பாக அல்லது வலியுறுத்தலாக இதனை முன்வைப்பது என்றால் - முதலில் அது குறித்து சம்பந்தனுடன்தான் பேசியிருக்க வேண்டும். சுமந்திரனுக்கு எதிராகக் குற்றப் பட்டோலை நீட்டுவதற்கு மட்டும் நேரம் ஒதுக்கி, ஜல்ரா போட மாவையையும் கூட்டிக் கொண்டு சம்பந்தனைக் கொழும்புக்குத் தேடிச் சென்று சந்திக்க முடிந்த ரெலோ, புளொட் குழுவினரால் இந்த விடயம் குறித்து சம்பந்தனுடன் பேச முடியாமல் போனமை - அல்லது சம்பந்தன் தரப்பைத் திட்டமிட்டு வெட்டித் தள்ளி வைத்தமை - வியப்புக்குரியது. சம்பந்தன், சுமந்திரன் போன்றோரை ஒதுக்கிவிட்டு, 'ஐக்கியப்பட்ட தமிழர்களின் ஒத்த நிலைப்பாடு' என்ற திருக்கூத்தை முன்னெடுப்பது - அதுவும் கூட்டமைப்புப் பங்காளி கட்சி என்ற உரிமையை ஒருபுறத்தில் கூறிக் கொண்டு, மறுபுறத்தில் அத்தகைய முயற்சியை எடுப்பது அரசியல் போக்கிலித்தனம் அன்றி வேறில்லை.

சம்பந்தனின் தலைமைத்துவத்தைப் பலவீனப்படுத்தும் பாங்கில் அமைந்த இந்த முயற்சிக்கு சம்பந்தன் மற்றும் தமிழரசின் பிற மூத்த தலைவர்களின் இணக்கம், இசைவின்றி தமிழரசுத் தலைவர் என்ற கோதாவில் தனித்து மாவை சேனாதிராஜா முண்டு கொடுக்கப் போவாரேயானால், அதன் பின்னர் தமிழரசுக்குள் நேரடியாகக் கடும் எதிர்ப்பை அவர் எதிர் கொள்ளவேண்டியவராய் இருப்பார் என்பது நிச்சயம்.

சம்பந்தனையும் சுமந்திரனையும் அரசியல் ரீதியாக வெட்டி ஒதுக்குதல் என்ற பெயரில், தமிழரசுக் கட்சியை மாவை சேனாதிராஜா விலைக்கு விற்பதற்கு கட்சியின் முக்கியஸ்தர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது வெளிப்படையானது. இந்த விவகாரத்தில் ரெலோ, புளொட் ஆகியன அரசியல் ரீதியில் கையைச் சுட்டுக் கொள்ளுவார்களோ என்னவோ, ஆனால் இந்த முயற்சிக்கு மாவை சேனாதிராஜா பின்கதவால் உதவப் போனார் என்றால் நிச்சயம் தமிழரசுக் கட்சியில் வாங்கி கட்டிக் கொள்வார் என்பது உறுதி. கட்சியின் இரண்டாவது மட்டத் தலைவர்களுடனான உரையாடலில் இவ்விடயத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது.

****

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கூட்டிய அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அரசுத் தரப்பின் 150 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 108 பேர் மட்டுமே பங்கு பற்றியிருக்கின்றனர். அமைச்சர் விமல் வீரவன்ஸ போன்ற அதிருப்தி குழுவினர் இக்கூட்டத்தில் பங்குபற்றவில்லை. எனினும் அதிருப்திக் குழுவில் இடம்பெற்றிருக்கும் சு.கவின் செயலாளர் தயாசிறி ஜயசேகர உட்பட சிலர் கூட்டத்தில் பங்குபற்றினர்.

கெரவலப்பிட்டியுகதனவி மின்நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு இலங்கை அரசு கைமாற்றிய விவகாரத்தில் அரசுத் தலைமைக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து இருக்கும் அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், இந்த விடயத்தில் மசிந்து - விட்டுக் கொடுத்து - போவதாக இல்லை எனத் தெரிகிறது. இவ்விவகாரத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் அரசின் முடிவு, அது மாற்ற முடியாதது என்று ஜனாதிபதி திட்டவட்டமாக தெரிவித்த பின்னரும், இது விடயத்தில் ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் பாடம் புகட்ட நினைத்திருக்கும் அதிருப்தியாளர்கள் குழு, அதற்காக மக்களை நேரில் சந்திப்போம் என்று அறிவித்து இருக்கின்றமை தெரிந்ததே. நாளை அல்லது மறுதினம் அவர்கள் இது தொடர்பில் மக்களைச் சந்திக்கும் முதலாவது பொதுக் கூட்டத்தை கொழும்பில் நடத்த ஏற்பாடு செய்து வருகிறார்கள் என்று ஒரு தகவல் கிட்டியது.

இதேசமயம் அவசர அவசரமாக இந்தியாவிலிருந்து உரத்தை இறக்குமதி செய்த விவகாரத்தில் 'கொமிஷன்' பணம் கேட்கப்பட்ட தாகக் கூறப்படும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது பற்றிய செய்தியை வெளியிட்ட கொழும்புப் பத்திரிகையின் ஆசிரியர் பொலிஸ் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அப்படி ஒரு விசாரணைக்கு அழைப்பதற்கான அதிகாரம் ஏதும் சட்டத்தில் பொலிஸுக்கு இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

ஊடகச் செய்தியினால் யாருக்கேனும் அவமானம் - அபகீர்த்தி - ஏற்பட்டால் அதற்காகக் கிரிமினல் குற்றச்சாட்டுகளைச் சுமத்த கூடிய சட்ட ஏற்பாடுகளை 2002 இல் ஆட்சிக்கு வந்த ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு நீக்கிவிட்டது. இப்போது இது விடயத்தில் சிவில் வழக்குத் தொடர்வ தற்கு மட்டுமே சட்டத்தில் இடமுண்டு. அப் படி இருக்கையில் மேற்படி பத்திரிகை நிறுவன ஆசிரியர் பொலிஸுக்கு அழைக்கப்பட்டமை குறித்து பல்வேறு தரப்பிலும் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. ஆனால் இந்தப் பத்திரிகை ஆசிரியர் முன்னர் மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகச் செயலாளராக இருந்தவர். அது மாத்திரமல்ல, அந்தப் பத் திரிகை கோட்டாபய ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு முழுப் பின்புல மாக இருந்த ஒன்று. அதன் நிர்வாகி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வலதுகை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். கோட்டாபய ராஜபக்ஷவின் இடது கையாக இருக்கும் அவரின் உத்தியோகபூர்வ செயலாளர் பி.பி.ஜயசுந்தரவை இலக்கு வைத் துத்தான் இந்தச் செய்தி வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆக, இப்போது கொமிஷன் பணம் குறித்த சர்ச்சை ஆளும் தரப்புக்கு நெருங்கிய பத்திரிகையில் மிக முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்திருப்பதற்கு உள்வீட்டுக் குழப்பம் தான் காரணம் என்கின்றன கொழும்பு வட்டாரங்கள். இதற்குமேல் இந்த விடயத்தில் நான் எதுவும் விவரிக்கத் தேவையில்லை. என் வாசகர்களே விடயத்தை தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். நான் விவரித்து எழுதி, என்னைச் சிக்கலில் மாட்டத் தேவையில்லை என்று நினைக்கிறேன். சரிதானே வாசக நண்பர்களே...?

**- மின்னல் -**

## சாவு எண்ணிக்கை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன இதனை உறுதிப்படுத்தியுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இவ்வாறு சாவடைந்தவர்களில் 12 ஆண்களும், 17 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் 60 வயதுக்கு மேற்பட்டோரில் 22 பேரும், 30 - 59 வயதுக்கு இடைப்பட்டோரில் 6 பேரும், 30 வயதுக்குட்பட்டவர்களில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 640 ஆக அதிகரித்துள்ளது.

## கனேடியத் தூதரகத்தின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனேடிய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் குழு நேற்று யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்டது.

தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் டொம் ப்றவ்ணல் தலைமையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி, திட்ட ஆலோசகர் ஆகியோரே கனேடியத் தூதரகத்தின் சார்பில் விஜயம் செய்தனர் .

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி கலாநிதி கே. சுதாகர், மொழிபெயர்ப்புகள் கற்றல் துறையின் தலைவர் எஸ். கண்ணதாஸ் ஆகியோரை கனேடிய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் சந்தித்து திட்ட மேம்பாடு குறித்து கேட்டறிந்தனர்.

## எரிபொருள் பற்றாக்குறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாக எரிபொருள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளதால் இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், உண்மையில் சந்தையில் எரிபொருளுக்கு எவ்விதத் தட்டுப்பாடும் இல்லை எனவும் அவர் மேலும் கூறினார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## அனைத்து மாணவர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்கள் என்ற ரீதியில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் மாத்திரமே பாடசாலைச் சென்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாத்திரமே கல்வி செயற்பாடுகளில் ஈடுபடுவர். அதனைத் தவிர்த்து வேறு எந்த கல்விசார் செயற்பாடுகளிலும் ஈடுபடப் போவதில்லை.

வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு பாடசாலை செல்வதற்கான சூழல் இல்லை. காரணம் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமையாகும்.

எனவே, அரசு மாகாணங்களுக்கிடையில் பாடசாலை செல்லும் ஆசிரியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்கும் அதேவேளை புதிய முறைமையில் இனி தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

சகல மாணவர்களுக்கும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## 2022 முதல் டிஜிட்டல் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற 'லங்கா கியூஆர் வலையமைப்பை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

டிஜிட்டல் பணம் அல்லது தேசிய அடையாள அட்டை அல்லது இவை அனைத்துக்கும் முன்னர், பணத்தைப் பயன்படுத்தாத பொருளாதாரத்தை நோக்கி செல்ல தேவையான சூழலை உருவாக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எந்த வசதிகள் இருந்தாலும், நாட்டு மக்கள் இந்த தொழில்நுட்பத்தை பயன் படுத்தவில்லையெனின் முயற்சிகள் பலனளிக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

"LankaQR" டிஜிட்டல் தொழில்நுட்பமானது "QR" குறியீட்டு முறையைப் பயன் படுத்தி பண பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு உதவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு அஞ்சாதீர்கள்!

## பெற்றோர்க்கு சுகாதாரத்துறை அறிவுரை

பாடசாலைகளில் சுகாதாரப்பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், பெற்றோர் எவ்வித அச்சமுமின்றி மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புமாறு சுகாதாரத்தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவிக்கையில் -

மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதில் சிறிதேனும் அச்சம்கொள்ளத் தேவையில்லை. தற்போதைய நிலையில் எமது பிள்ளைகள், முகக்கவசம் அணிவதற்குப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளனர்.

விசேடமாக இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் கூட முகக்கவசம் அணிவதற்குப் பழக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகளில் உணவு உண்பதற்கு சிறுவர்களைப் பழக்கப்படுத்த வேண்டாம். பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்கு வெளியில், எவ்வாறான சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டும் என்று சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். நாடளாவிய ரீதியில் உள்ள சகல அரச பாடசாலைகளிலும் ஆரம்ப வகுப்புகள், சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நேற்று ஆரம்பமாகியுள்ளன.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக பாடசாலைகளில் கிருமி தொற்றுநீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. - என்றார்.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# வாழைச்சேனை காணாமற்போன கடற்றொழிலாளர்கள் அமைச்சர் டக்ளஸின் முயற்சியால் பாதுகாப்பாக மீட்பு

கடலில் காணாமல்போன வாழைச்சேனை கடற்றொழிலாளர்களை மீட்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சி காரணமாக நான்கு வாரங்களின் பின்னர் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். கடந்த செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து ஏழு நாள்கள் கடலில் மீன்பிடிக்கும் ஏற்பாடுகளுடன் நான்கு கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் சென்றிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, குறித்த நான்கு கடற்றொழிலாளர்களும் இந்திய கடற்படையினரால் அந்தமான் தீவுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த நிலையில், திட்டமிட்டபடி கடற்றொழிலாளர்கள் கரை திரும்பாத நிலையில், சம்பந்தப்பட்ட உறவினர்களால் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்த விடயத்தில் கவனம் செலுத்திய கடற்றொழில் அமைச்சர், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குப் பணித்தமையுடன், இலங்கை மற்றும் இந்திய கடற் பாதுகாப்பு தரப்பினருக்கும் தகவலை தெரியப்படுத்தி ஒத்துழைப்பைக் கோரியிருந்தார்.

இந்தநிலையில், தற்போது நான்கு கடற்றொழிலாளர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஒற்றுமையின் பெயரால் பிரிப்பு

"ஈழத் தமிழர்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்று தந்தை செல்வநாயகம் விசனத்துடன் கூறிச் சென்ற கூற்றை நிரூபிப்பதில் தமிழர் தரப்பினர் – தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனத் தம்மை கூறிக்கொள்வோர் – சளைக்காது முயற்சி எடுத்து வருகின்றனர் என்றே தோன்றுகின்றது.

சகல வழிகளிலும் நலிவுற்றுப் போயிருக்கும் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்று தமது தீர்வுக்கான முயற்சியில் ஐக்கியப்பட்டு செயற்படுவதுதான் அவர்களுக்கான ஒரே மார்க்கமாக இருக்க முடியும். ஐக்கியம் முக்கியம் என்பதுதான் இன்றைய நிஜம்.

ஆனால், ஐக்கியத்தை ஏற்படுத்துகின்றோம் என்ற பெயரில் ஐக்கியத்தைச் சிதைக்கும் குயுக்தித்தனமே இப்போது அரசியல் சதி நகர்வாக முன்னெடுக்கப்படுகின்றது. அதுவும் சத்தம் சந்தடியில்லாமல், மிகவும் நுணுக்கமாக – நுட்பமாக – காய்கள் நகர்த்தப்படுகின்றன.

தமிழ்த் தேசிய ஆர்வலர்கள் என்ற வேடத்தில் களத்துக்குள் புகுந்த தரப்புக்களே ஐக்கியத்தின் பெயரில், ஐக்கியத்தைச் சிதைக்கும் சதித் திட்டத்தைக் கனகச்சிதமாக ஒப்பேற்றுகின்றன எனத் தோன்றுகின்றது. அதுதான் இவ்விடயத்தில் உள்ள மிகப் பெரிய துர்திஷ்டமாகும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றும் முழுதாக அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்திய அரசை ஒருமித்த நிலைப்பாட்டில் கோருவதற்கான முயற்சி என்ற பெயரில் ஓர் எத்தனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவே இந்த ஏற்பாட்டை முன்னின்று செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி என்று ஐந்து கட்சிகள் இது தொடர்பான பூர்வாங்கக் கூட்டத்தில் பங்குபற்றி, எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்தித்து மேல் நடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானித்திருக்கின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

இந்த நகர்வு வெளியில் பார்த்தால் ஐக்கியத்துக்கானது என முலாம் பூசப்பட்டாலும், உள்ளே ஐக்கியச் சிதறலுக்கான ஆப்பு துருத்திக் கொண்டிருப்பது மறைக்க முடியாததாக உள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேல் ஈழத் தமிழர் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமிழ் தரப்பில் பிரதான சக்தியாக புதுடில்லி அடையாளம் கண்டு அதனுடன் பேசி வருகின்றது. அதில் – கூட்டமைப்பில் – பிரதான கட்சி இலங்கைத் தமிழரசு.

இந்த ஒற்றுமைக் கூட்ட முயற்சிக்கான ஏற்பாட்டுக் கலந்துரையாடலில் தமிழரசுப் பிரதிநிதிகள் எவரும் இல்லை. இத்தகைய கூட்டங்களுக்கான அழைப்பு வந்தால் தமிழரசுக் கட்சி மட்டத்தில் விரிவாக ஆராயாமல் போய் பங்குபற்ற வேண்டாம் என்று தமிழரசுக் கட்சியின் 'சூம்' மூலமான அரசியல் குழுக் கூட்டத்தில் அதன் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு பல தடவைகள் வற்புறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் காரணமாகவோ என்னவோ அவர் கூட மேற்படி பூர்வாங்கக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

இந்தக் கூட்ட ஏற்பாடு தொடர்பில் தமிழரசின் பதில் பொதுச் செயலாளர், மூத்த துணைத் தலைவர்கள், பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருக்குமே எதுவுமே தெரியாது என்றும் கூறப்படுகின்றது.

சரியோ, பிழையோ புதுடில்லி தமிழ்க் கூட்டமைப்புடன்தான் – அதன் தலைவர் சம்பந்தனுடன்தான் – ஈழத் தமிழர் விடயங்களை இதுவரை கையாள்கின்றது; இனியும் கையாளும்.

அப்படி இருக்கையில் தமிழர்கள் சார்பில் இந்தியாவைக் கோரும் முக்கிய தீர்மானம் ஒன்றை அவருக்கே (சம்பந்தனுக்கே) தெரியாமல் எடுக்கும் முயற்சியில் – அதுவும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்று அதில் ஈடுபடுவது – கூட்டமைப்பு தர்மத்துக்கு முதுகில் குத்தும் பச்சைத் துரோகத்தனம்தான்.

இவ்விடயத்தை ஒட்டி சம்பந்தன் ஐயா குறிப்பிட்டவை இரண்டு விடயங்கள்தான். ஒன்று – "அப்படியா? எனக்கு எதுவுமே தெரியாதே...!" – அடுத்தது "13 ஆவதைத் தாண்டி நாங்கள் எங்கையோ நிற்கின்றோம். இனியும் பதின்மூன்றைத்தானா எங்கள் இலக்காக வைப்பது....?"

தமிழரசின் காலை வார காத்து நிற்கும் தலைவர்களுக்கு இப்பதிவு சமர்ப்பணம்.

# பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிக்க அஞ்சுவதேன்?

## அரசிடம் மாணவர் ஒன்றியம் கேள்வி

ஆரம்பப் பிரிவு மாணவர்களுடைய கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என்றால் ஏன் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க முடியாது? ஏன் அரசு அச்சமடைகின்றது? என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ஸ்ரீதன்ன தேரர் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கேள்விகளை எழுப்பியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கல்வித்துறையின் கட்டமைப்பு ஸ்தம்பிதம் அடைந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ளன.

ஒருபுறம் பல்கலைக்கழக கட்டமைப்பும் மறுபுறம் பாடசாலைக் கட்டமைப்பும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

ஆனால், இந்தக் காலப்பகுதிக்குள் பாடசாலையையோ அல்லது பல்கலைக்கழகத்தையோ ஆரம்பித்தல் தொடர்பான எந்தச் செயற்றிட்டங்களும் அரசிடம் இருக்கவில்லை.

தற்போதைய நிலைப்பாட்டினுள் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களை ஆரம்பித்தல் தொடர்பான ஆலோசனைகளை நாமும் அரசிடம் முன்வைத்திருந்தோம்.

ஆனால், அது தொடர்பில் அரசு எந்தக் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை.

மாறாக அவர்கள் நிகழ்நிலை கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைளை மாத்திரமே முன்னெடுப்பதற்கான யோசனையை முன்வைத்தனர் எனத் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விலை அதிகரிப்பு; இதுவரை தீர்மானிக்கவில்லை

## அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு



எரிபொருள்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் இதுவரையில் எந்தவொரு தீர்மானமும் எட்டப்படவில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலை அடுத்து, ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர் ஆசிரியர்கள்

நாடளாவிய ரீதியில் நேற்று பிற்பகல் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாட்டின் பிற பகுதிகளிலும் ஒரே நேரத்தில் போராட்டம் நடத்தப்பட்டது என்றும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# வெடிமருந்து மற்றும் கசிப்புடன் முல்லைத்தீவில் ஒருவர் கைது

முல்லைத்தீவு நகர் பகுதியில் சட்டவிரோத வெடி மருந்து மற்றும் கசிப்பை உடமையில் வைத்திருந்த நபர் ஒருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு நகர் சுற்றுக்காவல் நடவடிக்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வேளை ஈடுபட்ட முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நின்ற நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்த போது அவரிடம் இருந்து சட்ட விரோத வெடி மருந்து மற்றும் விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

சுதந்திரபுரம், உடையார் கட்டு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 42 அகவையுடைய நபரிடம் இருந்து 200 கிராம் வெடி மருந்து மற்றும் 1,500 மில்லிலீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையுடன், இவரை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நல்லூரில் இம்முறையும் கந்தபுராண படிப்பு விழா

வருடாந்த கந்தபுராண படிப்பு விழா நிகழ்வு கடந்த 20ஆம் திகதி தொடக்கம் நல்லூர் வடக்கு வீதியில், 138/08 ஆம் இலக்க இல்லத்தில் அமைந்துள்ள ஆறுமுகநாவலர் திருமுறை மண்டபத்தில் தினசரி காலை 6 மணியிலிருந்து மாலை 8 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் படிப்பவர்கள், பயன்சொல்பவர்கள் எல்லோரும் சென்ற வருடம் போல ஒன்றாகக் கலந்து சிறப்பிக்க முடியாத சூழ்நிலை உள்ளது என சைவ சமய பாதுகாப்பு பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய கொரோனாத் தொற்று நோய் காரணமாகவும், சுகாதாரப் பகுதியினரின் நடைமுறையைப் பின்பற்ற வேண்டியுள்ளதாலும் அடியவர்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். தொலைபேசி இலக்கம் 077 226 2572 உடன் இரவு 8 மணிக்குப் பின்னர் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுமாறு பங்குபற்ற விரும்புவோரை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் எனப் பேரவை மேலும் தெரிவித்துள்ளது. பழக விரும்பும் மாணவர்கள், அடியவர்கள் தொடர்பு கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தகரக்கொட்டிலில் வாழ்ந்துவரும் மக்கள்; அதிகாரிகளிடம் விடுத்துள்ள கோரிக்கை

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விலாங்குளம் கிராமத்தில் குடியிருப்பதற்கு வீடின்றி தகரக் கொட்டிலில் வாழ்ந்து வருகின்றோம் என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 100 இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வரும் இக்கிராம மக்கள் கூலித் தொழில்களை நம்பியே தங்களது சீவனோபாயத்தைக் கொண்டு செல்கின்றனர்.

1990 களில் ஏற்பட்ட யுத்த வன்முறை காரணமாக வெளியேற்றப்பட்ட இம் மக்கள் 2004இல் மீள் குடியேற்றம் செய்யப்பட்டநிலையில்தகரக்கொட்டிலில் மழை, வெயில் காலங்களில் சிறு குழந்தைகளை வைத்துக் கொண்டு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம் எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை கண்டி பிரதான வீதியிலிருந்து சுமார் 1.2 கிலோ மீற்றர் தூரத்தில் அமையப் பெற்றுள்ள இக்கிராமம் உட்கட்டமைப்பு வசதிகள் உட்படப் பல குறைபாடுகளும் இங்கு உள்ளன என அந்தப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

சீரான பாதை அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அசௌகரியங்களுடன் தொடர்ச்சியாகப் பல வருடங்களாக வீடின்றி தற்காலிக கொட்டில்களில் நிம்மதியான தூக்கமில்லாமல் பிள்ளைகளுடன் வாழ்கின்றோம் எனவும் தெரிவிக்கின்றனர்.

பல முறை உரிய அதிகாரிகளுக்கு வீட்டுப் பிரச்சினைகள் தொடர்பில் முன்வைத்த போதும் தீர்வின்றியே தவிக்கிறோம் என அப் பிரதேச மக்கள் மேலும் கவலை வெளியிட்டனர்.

எனவே தங்களுக்கு நிரந்தரமான கல் வீட்டை அமைக்கத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ‘நனோ நைட்ரஜன்’ வழங்க நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்ட நெற்செய்கையாளர்களுக்கு வழங்குவதற்காக இந்தியாவின் நனோ நைட்ரஜன் திரவ உரம் நேற்று யாழ். மாவட்டத்துக்கு எடுத்துவரப் படவுள்ளதாக மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.நிசாந்தன் தெரிவித்தார்.

ஏனைய மாவட்டங்களில் இந்தியாவின் நனோ நைட்ரஜன் உரம் வழங்கப்பட்டு வரும் நிலையில் யாழ்.மாவட்டத்துக்கான உர வழங்கல் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 11 ஆயிரத்து 260 ஹெக்டேயர் அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் ஒரு ஹெக்டேயர் நிலத்துக்கு 3 லீற்றர் அளவு உர திரவம் தேவைப்படுகின்றது. எனினும், நேற்று ஒரு பாரவூர்தி திரவம் மாத்திரமே யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய மக்களுக்கு வழங்குவதற்கு கொண்டு வரப்படவுள்ளது.

யாழ். மாவட்ட நெற் செய்கையாளருக்கு சுமார் 33 ஆயிரம் லீற்றர் திரவ உரம் தேவைப்பாடுள்ள நிலையில் முதற்கட்டமாக ஒரு பகுதி திரவ உரத்தை வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கு கட்டங்கட்டமாக உரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது – என்றார்.

## புன்னக்குடா சஹ்ரானின் சகாவுக்கு 39 ஏக்கர் நிலம்; விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதிக்குக் கடிதம்

*மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான புன்னக்குடா கடற்கரைக்கு அருகில் உள்ள 39 ஏக்கர் காணியை சஹ்ரான் அணியின் முக்கியஸ்தர் ஒருவரின் பெயருக்கு மாற்றியமை சம்பந்தமாக குற்றவியல் விசாரணை திணைக்களம் ஊடாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு மழைக்காடுகளை பாதுகாக்கும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜயந்த விஜேசிங்க, ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.*

*39 ஏக்கர் நிலம், கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி இலக்கம் 4551 என்ற காணி உறுதியின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அது மட்டக்களப்பு காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*இந்தக் காணியைச் சம்பந்தப்பட்ட நபர் 5 கோடி ரூபா கொடுத்து கொள்வனவு செய்துள்ளார். அந்த பணம் இந்த நபருக்கு எப்படி கிடைத்தது என்பது தொடர்பாக விசாரிக்குமாறு குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு உத்தரவிடுமாறும் விஜேசிங்க ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.*

*மேற்படி நபர் அந்தக் காணியைக் கொள்வனவு செய்த பின்னர், அதனை சஹ்ரான் குழுவினர் பயிற்சிகளைப் பெற வழங்கியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது. காத்தான்குடி அலியார் சந்தியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பாக சஹ்ரானுடன் இணைந்து செயற்பட்டார் என இந்த நபர் உள்ளிட்ட குழுவினருக்கு எதிராக காத்தான்குடி பொலிஸார் வழக்கு தொடர்ந்துள்ளனர் எனவும் ஜயந்த விஜேசிங்க கூறியுள்ளார்.*

*எனினும் அந்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை.*

*2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நடந்த ஈஸ்டர் குண்டு தாக்குதலின் பின்னர், இந்த நபர் கைது செய்யப்பட்டு தற்போது வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*இந்த நபர் உட்பட அவரது அணியினர் முன்னாள் அமைச்சர் மற்றும் அவரது சகோதரருடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தனர் எனவும் காணியைக் கொள்வனவு செய்ய இவர்களின் பணம் கிடைத்ததா என்ற சந்தேகம் இருப்பதால், உரிய விசாரணைகளை நடத்துமாறு விஜேசிங்க தனது கடிதத்தின் ஊடாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.*

# புனரமைத்து ஒரு வருடத்துக்குள் முழுமையாகச் சேதமடைந்த வீதி!





கிளிநொச்சி – கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் உள்ள தர்மபுரம் கிராமத்தில் 7 ஆம் ஒழுங்கை கடந்த வருடம் ஏழாம் மாதம் தார் வீதியாகப் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டு ஒரு வருடத்துக்குள் முற்று முழுதாகச் சேதமடைந்துள்ளது.

நிறைந்த கிராமம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலகத்தால் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு கரைச்சி பிரதேச சபையின் தொழில்நுட்ப மேற்பார்வையில் பிரதேச சபைக்குச் சொந்தமான வீதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்பந்தம் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வீதி புனரமைப்புக்கான ஒப்பந்தத்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் பெற்றிருந்தாலும் வீதி புனரமைப்புப் பணிகளைத் தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவர் மேற்கொள்வதற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அனுமதி வழங்கியிருந்திருந்தது.

எனவே குறித்த வீதியின் பணிகள் கடந்த வருடம் ஏழாம் மாதம் நிறைவுபெற்றிருந்தன. ஒப்பந்த காலத்தில் புனரமைப்புப் பணிகளின் தொழில்நுட்ப மேற்பார்வை மற்றும் கொடுப்பனவுகளுக்கான சிபார்சுகளை கரைச்சி பிரதேச சபையே மேற்கொண்டிருந்தது.

ஆனால் குறித்த வீதியின் தரமற்ற புனரமைப்பு காரணமாக ஒரு வருடத்துக்குள் முற்று முழுதாக சேதமுற்று பொது மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுகிறது. எனவே இது தொடர்பில் பிரதேச பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளமையோடு, மேற்பார்வை மற்றும் தொழில்நுட்ப கண்காணிப்பை மேற்கொண்ட கரைச்சி பிரதேச சபையின் மீதும் தங்களது விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

முறைகேடனான அபிவிருத்திப் பணிகளைக் கண்டுகொள்ளாத திணைக்களங்கள் மீதும் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 172**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**430. நீங்கள் முன்னர் குறிப்பிட்ட மக்களின் நிரந்தர தீர்ப்பாயம் என்பது என்ன?**

இது ஒரு சுயாதீன தன்னார்வ, அரசு சார்பற்ற அமைப்பு. சுயாதீன மக்களாலும் குழுக்களாலும் அரசுப் பற்று இல்லாத நிறுவனங்களாலும் 1979 இல் இத்தாலியில் அமைக்கப்பட்டது.

அதன் உருவாக்கத்தில் பின்னணி, நோக்கம், தன்மை என்பன எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்வது நீண்ட சட்ட வியாக்கியானங்களாகலாம். ஆகவே சுருக்கமாக, விளங்கிக் கொள்ளக் கூடிய வகையிலும், தமிழ் மக்கள் சம்பந்தப்பட்டவை பற்றியும் குறிப்பிடுகின்றேன்.

எல்லாவற்றுக்கும் முன் இந்த தீர்ப்பாயத்துக்கு அதன் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தும் சர்வதேச அதிகாரம் என்பது இல்லை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அதனுடைய தீர்ப்பின் வலு, அதன் மதிப்பு என்பன தீர்ப்பாயம் அரசுசாரா சுயாதீன அமைப்பென்பதிலும், வழக்கு அதன் முன்னால் ஆராயப்பட்ட தன்மையும், கட்சிகளாக, சாட்சியங்களுக்காக தோன்றியவர்களும், சாட்சியங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைகளிலும், மேற்கொள்ளப்பட்ட வாதங்களிலும், எல்லாவற்றிற்கும் மேலாக நடுவர்களின் அறியப்பட்ட பின்னணி, அறிவு, மதிப்பு, சர்வதேச புகழ் என்பவற்றை ஒட்டியும் அங்கீகாரம் பெறும்.

இது ஆரம்பிக்கப்பட்டதின் உந்து சக்தியாக, அமெரிக்காவின் உள்ளிருந்தே, வியட்நாமில் 1966 - 1967 இல் அட்டூழியங்களை விசாரிக்க எழுந்த ரஸ்ஸில் **(Russel Tribunal)** தீர்ப்பாயத்தின் விசாரிப்புகளும் அதன் அறிக்கைகளும் பெற்ற பெரும் வரவேற்பு அமைந்தது. அதுவும் ஒரு தன்னார்வக் குழு. அதன் முறையைத் தொடர்ந்து அப்படியான சில தன்னார்வத் தீர்ப்பாயங்கள் 1974, 1976 காலங்களில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் அதன் சர்வாதிகாரிகளால் நடத்தப்பட்ட அட்டூழியங்களை விசாரித்து தீர்ப்புகளை வெளியிட்டன. இவற்றை ஆராய்ந்து பார்த்த அந்த நீதிபதிகளின் தகைமைகளும், அவர்களுக்கிருந்த நம்பகத்தன்மைகளிலும் சர்வதேசத்தில் பரந்த தாக்கங்களை ஏற்படுத்தின. இந்த தீர்ப்பாயங்களில் ஈடுபட்ட அமைப்புகளுள் மக்களும் பின்னர் 1979 மக்களின் நிரந்தர தீர்ப்பாயத்தை ஏற்படுத்தினார்கள்.

இப்படியான தீர்ப்பாயங்கள் பலவற்றை விசாரித்து வழங்கிய தீர்ப்புக்களினால்தான் சர்வதேச குற்றங்களை விசாரித்து, தீர்ப்புகளைப் பெற்று நடைமுறைப்படுத்தக் கூடிய அதிகாரங்களோடு ஒரு அமைப்பு இல்லை என்று கருதப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) பின்நாளில் நிறுவப்பட்டது.

இன்னுமொரு உந்துசக்தியாக காலனித்துவத்தில் இருந்த நாடுகள் விடுதலை பெற, அந்த நாடுகளினுள் இருந்த, பல இன மதவாரியாக வேறுபட்ட மக்கள் நிஜமான விடுதலை பெறாமல், அந்தப் பிரிவினைகளைப் பாவித்துத் தொடர்ந்தும் காலனித்துவத்தை இன்னொரு விதத்தில் ஏற்படுத்தி, சுரண்டுவதற்கு வழியாக வெளியேறும் காலனித்துவ அதிகாரிகள் திட்டங்கள் அமைத்தார்கள். இதனால் அப்படி இன, மதவாரியாக வேறுபட்ட மக்கள் நிஜமான விடுதலை பெறாமல் இன்னுமொரு புதிய காலனித்துவத்துக்கும் அடக்குமுறைகளுக்கும் ஆளாவதின் வெளிப்பாடுகளில் இருந்து பிறந்த உரிமைப் போராட்டங்களை ஆராயவும் விளங்கிக் கொள்வதற்காகவும் இருந்தது.


இலங்கை, இந்தியா, லத்தீன் அமெரிக்க நாடுகள், பிஜி தீவுகள், தீமோர் தீவு, ஆபிரிக்காவில் கொங்கோ, சூடான், நைஜீரியா, ரொடிசியா, தென்ஆபிரிக்கா போன்ற நாடுகளை உதாரணமாகப் பார்க்கலாம். காலனித்துவத்தைக் கட்டியாண்ட பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, பெல்ஜியம், ஸ்பெயின், பின்னாளில் சோவியத் ரஷ்யா எல்லாமே இதனை அடிப்படையாகக் கையாண்டுதான் தங்களது காலனி நாடுகளில் இருந்து வெளியேறின.

**431. அப்படியான செயற்பாடுகளையோ, விளைவுகளையோ மேற்பார்வை செய்யவோ கட்டுப்படுத்தவோ சர்வதேச அமைப்புக்கள் ஏற்படுத்தப்படவில்லையா?**

இரண்டாவது மகாயுத்தத்தின் முடிவில்தான் பல நாடுகள் காலனித்துவ நாடுகளின் பிடியிலிருந்து விடப்பட்டன. ஆனாலும் சமமாக அமெரிக்கா, ரஷ்ய வல்லரசுகளிடையே பனிப்போர் நடந்து கொண்டிருந்தது. ஆகவே, அவை எல்லாம் இந்தப் பனிப்போரில் அகப்பட்டு சரி, பிழைகள் வல்லரசுகள் சார்பாகவே தீர்க்கப்பட்டன.


நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் அமர்வு ஒன்று

இந்த காலகட்டங்களால் இப்படியான உரிமைகள், அட்டூழியங்கள் போன்றவை வல்லரசு ஆதிக்கங்களால் கணக்கெடுக்கப்படாமல் கிடக்கின்றன என இப்படியான போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் அல்ஜியர்ஸில் **(Aligiers )** (இது பிரான்ஸின் கீழ் காலனியாக இருந்து வெளியேற பலத்த ஆயுதப் போராட்டம் நடத்தியது) 1976 இல் கூடி மக்களது உரிமை என்ற சர்வதேச தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர். அது மனித உரிமை சட்டங்களின் ஓர் அத்திபாரமாகக் கருதப்படுகிறது. **( Universal Declaration of the Rights of the Peoples )** அல்ஜியர்ஸில் நிறைவேற்றப்பட்ட இந்த சாசனம் விடுதலைப் போராட்டங்களைப் பற்றி ஐ.நாவில் 14 டிசெம்பர் 1960 இல் ஆக்கப்பட்ட தீர்மானம் 1514( XV ) யையும் இணைத்தது. இவற்றினால் மக்கள் குழுமங்கள் சுயாதீனமாக தங்களின் எதிர்காலங்களை அமைத்துக்கொள்ள சுயநிர்ணய உரிமையையும் உள்ளடக்கியவை என்று விளங்கிக்கொள்ள முடியாது. காலனித்துவம் முடிந்தது, அரசியல் நிலையில் காலனித்துவம் வைத்திருந்த நாடு, அங்கிருந்து விலகியது மாத்திரம்தான். சுயநிர்ணயத்துக்கு உரித்தான எத்தனையோ இனங்களின் - மக்கள் குழுமங்களின் உரிமைகள் கணக்கெடுக்கப்படாமலேயே விடப்பட்டன என்ற சித்தாந்தங்கள் வளர்ந்தன.




அப்படி விடுதலை அல்லது சுயநிர்ணய உரிமை கோரியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள், மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றங்களை ஆராய்ந்து தண்டிக்க ஐ.நாவில் ஏற்பாடுகள் இருக்கவில்லை. அங்கத்துவ நாடுகள் பல இவற்றில் ஈடுபட்டுக் கொண்டே ஆதரவு தந்தன. இவற்றால் பல இழுபறிகளுக்குப் பின்னர் ரோம் சட்டங்கள் ஆக்கப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றும் 2002இல் அமைக்கப்பட்டது. ஐ.நா. அமைப்பின் அங்கத்துவ நாடுகளிடையே பலமான விவாதங்களின் பின் ஐ.நாவிலிருந்து தனித்துவமாக, சுயாதீனமாக இயங்குமாறு அதை நிறுவுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு ஆதரவு தெரிவித்த நாடுகள் அங்கத்துவர்களாகவும் பல நாடுகள் அதனை ஏற்றுக்கொள்ளாதவையாகவும் உள்ளன. அமெரிக்கா, ஸ்ரீலங்கா, இந்தியா போன்றவை ICC யில் அங்கத்துவம் கொண்டவையல்ல. நடப்பதிகாரம் கொண்டதினால் பாதிக்கப்பட்ட இனங்கள், மக்கள் குழாம்கள் என்பன ICC பல நீதிபதிகளை உள்வாங்கி பெரும்பான்மையான வழக்குகளை ஆராயலாம் என எதிர்பார்த்தார்கள். ஆனால் அதன் வளங்களும் பொறிமுறைகளும் வலிமை பொருந்திய நாடுகள் தமது குற்றங்கள் பலமாக விசாரிக்கப்படாது இருக்க ஒப்புக்கு இதனை ஏற்படுத்தின என்பதை இந்த நீதிமன்றம் இன்றுவரை எடுத்துக் கொண்ட வழக்குகளின் பின்னணியில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

அதற்கு மாறாக மக்களின் நிரந்தரத் தீர்ப்பாயம் என்பது ஒரு தலைவர், நான்கு உபதலைவர்கள், காரியதரிசி, சர்வதேச புகழ்பெற்ற பல சட்டவல்லுநர்கள், சட்டவாளர்கள், சமூக ஆய்வாளர்கள் எனப் பலதரப்பட்ட துறையிலிருந்து 66 நிபுணர்களைப் பட்டியலில் வைத்திருக்கிறது. இன்று வரையில் 46 வழக்குகளை ஆராய்ந்து தீர்ப்புகளை வழங்கியுள்ளது. அதில் ஸ்ரீலங்காவும் ஒன்று.

**432. சுயநிர்ணய உரிமை பற்றி இந்த தீர்ப்பாயம் ஏதாவது புரிதலைக் கொண்டுள்ளதா?**

முன்னர் குறிப்பிட்ட அல்ஜியர்ஸ் **( Aligiers)** சாசனத்தில் சுயநிர்ணய உரிமை **(Self Determination)** முக்கிய பங்கு வகித்து, தங்களது இறைமைக்குப் போராடும் மக்களுக்கு அது சட்டரீதியான ஆதரவையும் அதன் வழியில் முன்னேறி வெற்றி கொள்ளக்கூடிய பாதையையும் காட்டியது. அல்ஜியர்ஸ் சாசனத்தில் அந்த முறைமையைக் கோரும் உரிமை, அது சுயநிர்ணயத்தால் தீர்மானிப்பது, அதன் வழியில் ஓர் இனமோ, குழுமமோ விடுதலை பெறுவது என்பது குறிப்பிட்ட கால எல்லைக்குள் அடக்கப்படவில்லை என ஏற்றுக் கொள்ளப்பட்டது. அப்படியான இறைமையைக் கோரும் உரிமையை வெளிநாட்டு சக்திகள் அல்லது உள்நாட்டு சக்திகள் தடை செய்தாலும் அவை எப்படி நீதியுள்ளனவாக அமைகின்றன என்பதை 1979இல் இருந்து ஆராய்ந்து பல அறிக்கைகள் மக்களின் நிரந்தர தீர்ப்பாயம் தெரிவித்து உள்ளது. ஏனெனின் அவர்களது ஆணிவேர் அல்ஜீயர்ஸ் சாசனத்தின் சரத்தில் ஏற்பட்டவையே. பிரித்தானிய காலனித்துவம், இலங்கையில் சுதந்திரத்தை பொது அளவில் கொடுத்து வெளியேறிய பின் தமிழ் மக்கள் தமது இறைமையை சுயநிர்ணயத்தில் கேட்பதற்குப் பொருந்தும்.

(வளரும்....)

# யாழ். ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொமர்ஷல் வங்கியால் மருத்துவ உபகரணங்கள்






யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை ஆதார வைத்திய சாலைக்கு கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தால் 28 லட்சம் ரூபா பெறுமதியான இரத்த வாயு எலக்ட்ரோலைட் அனலைசர், நொன் இன் வாசிப் வெண்டிலேட்டர், உறைதல் பகுப்பாய்வி என்பன கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தவிசாளரும் முன்னாள் பிரதம நீதியரசருமாகிய ஸ்ரீபவன், கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக் குநரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநரின் ஆலோசகருமாகிய லயன் எஸ்.ரெங்கநாதன், வேலணை கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் லயன் கே.சதீஷ் ஆகியோர் இணைந்து ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரிடம் வழங்கிவைத்தனர்.

இதேவேளை, கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தால் கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்திய சாலை என ஒரு கோடி ரூபா பெறுமதியான மருத் துவ உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது.

## மல்லாகத்தில் விபத்து; ஒருவர் படுகாயம்

யாழ்.மல்லாகம் சந்தியில் டிப்பர் வாகன மொன்றும், மோட்டார் சைக்கிளொன்றும் மோதி இடம் பெற்ற விபத்தில் இளைஞரொருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. இந்த விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார். இதன்போது, காயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அஸாத் ஸாலிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (திங்கட்கிழமை) குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 9 ஆம் திகதி இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் ஷரீஆ சட்டம் குறித்த சர்ச்சையான கருத்தொன்றை வெளியிட்டமையை அடுத்து மார்ச் 16 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பொய் முறைப்பாடு செய்த பெண் கைது

கொவிட் தடுப்புக் குழுவினரின் சீருடை அணிந்த 6 பேர் தமது வீட்டுக்கு வந்து, 17 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றனர் என செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை நடத்திய பொலிஸார், முறைப்பாடு செய்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

முறைப்பாடு செய்த பெண்ணே இந்தக் கொள்ளையை செய்துள்ளார் என விசாரணை களில் கண்டறியப்பட்டதாக மிரிஹான குற்ற விசாரணைப் பிரிவின் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்ட மீகொடை, மினுவந் தெனிய போரெக்கெட்டிய பிரதேசத்தில் உள்ள வீட்டுக்கு பொலிஸார் சென்றுள்ளனர். வீட்டில் பரிசோதனைகளை மேற் கொண்ட போது, கொள்ளையிடப்பட்டன என முறைப்பாட்டில் கூறப்பட்டிருந்த நடனத்துக்கு அணியும் சில உடைகள் எரியூட்டப்பட்ட இடத்தில் இருந்து சில மாதிரிகளை மீட்டுள்ளனர்.

இதனையடுத்து ஏற்பட்ட சந்தேகம் காரணமாக பொலிஸார் முறைப்பாடு செய்த பெண்ணிடம் தீவிர விசாரணை நடத்தியுள்ளனர்.

விசாரணையில் சகல தகவல்களும் தெரியவந்துள்ளன.

பெண்ணிடம் நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளை அடுத்து, கொள்ளையிடப்பட்ட சுமார் 17 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் வீட்டுக்குப் பின்னால் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தங்க ஆபரணங்களை வைக்கும் பெட்டிகள் தங்கம் புதைக்கப்பட்டிருந்த இடத்துக்கு சற்று தொலைவில் கிடந்த நிலையில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## மெனிக்கே மகே ஹித்தே பாடலை ஜனாதிபதிக்காகப் பாடிய தயாசிறி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கோரிக்கைக்கு அமைய மெனிகே மகே ஹித்தே பாடலை அமைச்சர் தயாசிறி ஜயசேகர பாடியுள்ளார்.

யுகதனவி மின் உற்பத்தி நிலைய உடன்படிக்கை தொடர்பில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமொன்று நடைபெற்றது.

ஜனாதிபதியின் இல்லத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சி உறுப்பினர்களுக்காக ஜனாதிபதி இராப்போசன விருந்து ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தார்.

ஜனாதிபதியின் விசேட கோரிக்கைக்கு அமைய யொஹானி டி சில்வா பாடிய மெனிக்கே மகே ஹித்தே பாடலை தயாசிறி பாடியுள்ளார்.

ஜனாதிபதி ஒலிவாங்கியை தயாசிறியிடம் கொடுத்து பாடல் ஒன்றை பாடுமாறு கோரினார் எனவும், தாம் ஆயத்தமாக வரவில்லை என தயாசிறி கூறினார் எனவும் சிங்கள ஊடகம் தெரிவித்துள்ளது.

எனினும் ஆயத்தமாக தேவையில்லை தயாசிறி நல்ல பாடகர் என ஜனாதிபதி கூறியுள்ளார். இதன் பின்னர், ஜனாதிபதிக்கு எந்த பாடல் பிடிக்கும் என வினவிய தயாசிறி, மெனிக்கே பாடலை பாடியுள்ளார் என சிங்கள ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதுடன், ஆளும் கட்சிக்குள் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிங்களமயமாகின்றது பனை அபிவிருத்தி சபை

பனை அபிவிருத்திச் சபையில் இதுவரை காலமும் பெரும்பான்மையாக தமிழர்களே பணிபுரிந்து வந்த நிலையில் அதனை மாற்றியமைத்து சிங்களவர்கள் உள்ளீர்க்கப்படுகின்றனர்.

அத்துடன் வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு அமைவாக பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் செயற்பட வேண்டிய நிலையில் அதனை இரகசியமாக கொழும்புக்கு மாற்றும் திட்டம் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் சிறப்பாகக் காணப்படும் வளமான பனைக்குரிய அபிவிருத் திச் சபை மெல்ல மெல்ல சிங்களமயமாகிப் போகின்றமை தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்று பனை அபிவிருத்திச் சங்கங்கள் குற்றம் சுமத்துகின்றன.

பனை அபிவிருத்திச் சபை 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் தலைவர்களாகத் தமிழர்களே நியமிக்கப்பட்டு வந்தனர். ராஜபக்ஷ ஆட்சியின் பின்னர், பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக முதன்முறையாக பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே சபையை முழுமையாக சிங்களமயமாக்கும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. பனை அபிவிருத்திச் சபை உருவாக் கப்படும்போதே அதன் தலைமையகம் யாழ்ப்பாணத் திலேயே அமைய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்திலேயே இயங்கியது. தற்போது அதன் கணக்காய்வு பிரிவு கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகப் பிரிவையும் கொழும்புக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

முற்று முழுதாகத் தலைமை அலுவலகத்தை கொழும்புக்கு மாற்றும் நடவடிக்கையின் ஆரம்பமே இது என்று சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதேவேளை, பனை அபிவிருத்திச் சபையில் இணைக்கப்பட்ட தற்காலிக ஊழியர்களில் தமிழர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாத அதேவேளை, சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கடந்த முடக்க காலத்தில் நேர்முகத் தேர்வு கொழும்பில் நடத்தப்பட்டுள்ளது. அதில் வடக்கைச் சேர்ந்த ஒரு சிலருக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது என்பதுடன் சிங்களவர்களே அதிகம் பங்குபற்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பனை அபிவிருத்திச் சபையில் பணியாற்றி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெற்ற காலத்திலிருந்து ஒரு மாதத்துக்குள் பணிக் கொடை வழங்கப்பட வேண்டும். ஆனால், கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு இன்னமும் பணிக்கொடை வழங்கப்படவில்லை.

பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கைதடியில் உள்ள கட்டடம் முன்னைய நல்லாட்சி அரசின் காலத்தில் அமைச்சராக இருந்த சுவாமிநாதனால் திறந்து வைக்கப்பட்டது. அதற்குரிய நினைவுக் கல் தற்போது பிடுங்கி அகற்றப்பட்டுள்ளது.

மேலும், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் உரிய விசாரணைகளின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இவர்களது இடத்துக்கு தற்போது பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கணக்காளர் பதவி வெற்றிடத்துக்கு இரண்டு வருடமாக சகலவித தகுதியுடனும் அனுபவத்துடனும் பதில் கடமையில் உள்ள தமிழர் நியமிக்கப்படாது அதே இடத்துக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பனை அபிவிருத்திச் சபையை சிங்களமயமாக்கும் முயற்சி தொடர்பில் ஆளும் கட்சியின் சார்பில் வடக்கில் உள்ள அமைச்சரோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ, தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ எந்தவித எதிர்ப்பையும் காண்பிக்கவில்லை என்று பனை அபிவிருத்திச் சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன.

# இரசாயன உரத்தை வழங்கக்கோரி மன்னாரில் பாரியளவில் போராட்டம்







விவசாயிகளுக்கு உடனடியாக இரசாயன உரத்தை வழங்கக் கோரியும் அரசின் திட்டமிடாத நடவடிக்கையை கண்டித்தும் மன்னாரில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம் பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) காலை 10.30 மணியளவில் இந்தக் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 174 கமக்கார அமைப்புகளை உள்ளடக்கிய மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்தக் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம் சந்தியில் ஆரம்பமான ஊர்வலம் உயிலங்குளம் மன்னார் வீதியில் அமைந்துள்ள உயிலங்குளம் கமநல சேவைகள் நிலையம் வரை முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி ஊர்வலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.விநோநோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர சபை முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

அத்தோடு, அரசின் திட்டமிடாத நடவடிக்கையைக் கண்டித்து விவசாயிகள் கோஷம் எழுப்பியதோடு, அரசாங்கம் உடனடியாக இரசாயன உரத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய மகஜரும் வாசிக்கப்பட்டு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உர இறக்குமதியில் பாரியளவில் நிதி மோசடி; ஐக்கிய மக்கள் சக்தி சி.ஐ.டியில் முறைப்பாடு

நனோ நைட்ரஜன் உர இறக்குமதியில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாட்டை வழங்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

மேலும் பக்கச்சார்பின்றி விசாரணையை நடத்தி இந்த ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஜே.சி.அலவத்துவல மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் உள்ளிட்ட உறுப்பினர்களே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாட்டை வழங்கியுள்ளனர்.



## வடக்கு மாகாண ஆளுநர் ஜீவனை சந்தித்த ரிஷாத் மற்றும் ஆனந்தசங்கரி

வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை நாடாளுமன்ற உறுப்பினரான ரிஷாத் பதியுதீன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஆனந்தசங்கரி ஆகியோர் சந்தித்துள்ளனர்.

இவர்களின் சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றுள்ளது. வடக்கு ஆளுநராகப் பொறுப்பேற்ற ஜீவன் தியாகராஜாவை நல்லெண்ண அடிப்படையில் இருவரும் சந்தித்து கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிரடிப்படை சுற்றிவளைப்பு மாத்தறையில் 14 பேர் கைது

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகளில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆறு மதுபான சுற்றிவளைப்புகளில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், 112 லீற்றர் மதுபானம், 780 லீற்றர் கோடா, இரு செப்புத் தகடுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இரத்தினபுரி - கொடக்கவெல பொலிஸ் பிரிவு, மஹகும்புர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆறு சுற்றிவளைப்புகளில், அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை - பிட்டபெத்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் ரக வாகனத்தில் மணல் ஏற்றிக்கொண்டிருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிட்டபெத்தர பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

## மன்னார் தாழ்வுபாடு பகுதியில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு கிராம பகுதியில் ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளுடன் 18 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், தாழ்வுபாடு கிராம பகுதியில் 10 கிலோ 370 கிராம் எடை கொண்ட கஞ்சா பொதிகளை தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இந்த இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விதானகே, தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி கேரள கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளதோடு, அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 18 வயதுடைய மன்னார் கீரி பகுதியைச் சேர்ந்த இளைஞரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## மட்டு. போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை உணவில் பல்லி!



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை மூடி பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள் சீல் வைத்துள்ளனர்.

குறித்த சிற்றுண்டிச்சாலையில் நோயாளி ஒருவர் வாங்கிய சாப்பாட்டில் பல்லி காணப்பட்டதையடுத்து, அவர் உடனடியாக வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்படி சிற்றுண்டிச்சாலையை பரிசோதனை செய்த பின்னர் சிற்றுண்டிச்சாலையை நடாத்தி வருபவருக்கு எதிராக மட்டக்களப்பு நீதிமன்றில் நேற்று (திங்கட்கிழமை) உணவு சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து, 10 ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறும் சிற்றுண்டிச்சாலையை மூடி சீல்வைக்குமாறும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம்.றிஸ்வான் நேற்று (திங்கட்கிழமை) உத்தரவிட்டார். இதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சந்திரசிறி தலைமையிலான பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் உடனடியாக சிற்றுண்டிச்சாலையை மூடி சீல்வைத்தனர்.

## சந்தேக நபர்களை கைது செய்ய சென்ற பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி

கடந்த மாதம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதலிய கோயில் பகுதியில் வன்முறைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை வட்டுக்கோட்டைப் பொலிஸார் தேடி வந்தனர்.

அதனடிப்படையில் அராலியில் உள்ள திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரின் இல்லத்தில் சந்தேகநபர் ஒருவர் மறைந்திருந்த விடயம் பொலிஸாருக்குத் தெரிய வந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்வதற்கு முயன்றனர்.

இதனை அவதானித்த திடீர் மரண விசாரணை அதிகாரி, அந்தச் சந்தேகநபர் தனது வீட்டில் தஞ்சம் புகுந்துள்ளார் என்றும் அவருக்கும் குறித்த சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் தனக்கு பொலிஸ் உயர் அதிகாரிகளைத் தெரியும் என்றும் அவரை கைது செய்ய வேண்டாம் என்றும் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

அதற்கு பொலிஸார், பாதிக்கப்பட்ட தரப்பினர் தமக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் தாம் சந்தேக நபர்களைக் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அதிகாரம் இருப்பதாகத் தெரிவித்தனர்.

அதன் பின்னரும் அந்த அதிகாரி நீண்ட நேரமாக பொலிஸாருடன் முரண்பாட்டில் ஈடுபட்டிருந்தார். பின்னர் பொலிஸார் குறித்த சந்தேக நபரையும் இன்னொரு சந்தேக நபரையும் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அதன் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# நாகவிகாரையின் நாட்டாண்மையை ஆரியகுளத்தில் அனுமதிக்க முடியாது

## பொ. ஐங்கரநேசன் கண்டனம்



யாழ்ப்பாணம் மாநகரசபையால் ஆரிய குளத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளில் நாகவிகாரை ஆரம்பம் முதலே தலையீடு செய்து வருகிறது. குளத்தின் நடுவே தியான மண்டபம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்த நாகவிகாரையின் விகாராதிபதி விமலதேரர், இப்போது குளத்தின் பருத்தித்துறை வீதிப்பக்கமாக நடைபாதை அமைக்கப்பட்டு வருவதை உடனடியாக நிறுத்துமாறும், குளத்தைச் சுற்றுலாத் தேவைகளின் பொருட்டுப் பயன்படுத்தக் கூடாது என்றும் மாநகர முதல்வருக்குக் கடிதம் மூலம் கட்டளை பிறப்பித்துள்ளார்.

குளத்தின் அபிவிருத்திப் பணிகளில் நாகவிகாரையின் இத்தகைய நாட்டாண்மையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது காட்டமான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

ஆரிய குளத்தின் புனரமைப்புப் பணிகளில் அண்மைக்காலமாக நாகவிகாரை தலையிட்டு வருகின்றமை தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஆரியகுளம் நாகவிகாரைக்கு உரித்தான குளம் அல்ல. ஆன்மீகத் தேவைகளின் பொருட்டு வேறு ஆலயங்களால் உருவாக்கப்பட்ட குளமும் அல்ல. இது மழைநீர் சேகரிப்பு மற்றும் வெள்ள நீர்முகாமைத்துவத்தில் தமிழ் மக்கள் கொண்டிருந்த அறிவைப் பறைசாற்றுகின்ற பண்டைய குளங்களில் ஒன்றாகும். வேறு குளங்களில் இருந்து படிமுறைகளில் நிரம்பிவழிகின்ற மழைநீரைச் சேகரிக்கும் பொருட்டும், மிகை மழைநீரைக் கடலுக்குள் அனுப்புவதன் மூலம் யாழ்.நகர் வெள்ளத்தினுள் மூழ்காதிருக்கும் பொருட்டும் அமைக்கப்பட்ட குளம் ஆகும்.

ஆரியகுளம் தொடர் பராமரிப்பின்மையால் நாற்றமெடுக்கும் கழிவுக்குளமாக மாறி நிலத்தடி நீர் மாசுபாட்டையும் சுகாதார சீர்கேட்டையும் ஏற்படுத்தி வந்ததால் இது புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பலதரப்பும் பலகாலமாக வலியுறுத்தி வந்துள்ளன. தற்போது புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துள்ள யாழ் மாநகரசபை, குளம் யாழ். நகர மையத்தில் நுழைவாசலில் அமைந்திருப்பதால் அதனை மக்களைக் கவரும் சூழல்சார் சுற்றுலா மையமாக அமைத்து வருகிறது. இதனை விரும்பாத விகாராதிபதி அபிவிருத்திப் பணிகளுக்குத் தடைகளை ஏற்படுத்தி வருகிறார்.

ஆரியகுளத்தில் ஒரு காலத்தில் பிக்குகள் நீராடினார்கள் என்ற கருத்தைப் பரப்புவதன் மூலம் குளத்தின் மீது உரிமை கொண்டாட முயலும் விகாராதிபதி, அபிவிருத்திப் பணிகளை நிறுத்துவதற்கு அல்லது தமக்குரியதாக மாற்றி அமைப்பதற்கு யாழ்.மாநகர சபையை வற்புறுத்தி வருகிறார். இலங்கையில் பௌத்தத்துக்கே முதலிடம் என்ற வகையில் இவர் யாழ்.மாநகர சபையின் மீது அரசியல் மற்றும் இராணுவ அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் கூடும்.

ஆனால், யாழ்மாநகர சபை குளத்தின் அருகேயுள்ள மக்கள் குடியிருப்புகளினதும் வணக்கத் தலங்களினதும் இயல்பு நிலையைச் சீர்குலைக்காத வகையிலும், பண்பாட்டுப் பிறழ்வுகளை ஏற்படுத்தாத வகையிலும் அபிவிருத்திப் பணிகளை உறுதி செய்துகொண்டு எவ்விடர்வரினும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும் - என்றும் தெரிவித்துள்ளார்.

# மறவன்புலவு சச்சி ஐ.நாவுக்கு கடிதம்!

## பங்களாரதேஷில் நடைபெறும் இன அழிப்பை நிறுத்தக்கோரி

ந.லோகதயாளன்
யாழ்ப்பாணம், ஒக்.26

பங்களாதேஷ் நாட்டில் இடம்பெறும் இந்துக்களுக்கு எதிராக இடம்பெறும் இன அழிப்பை நிறுத்தக்கோரி இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஐ.நாவிற்குக் கடிதம் எழுதியுள்ளார்.

பங்களாதேஷ் நாட்டில் தற்போது இடம்பெறும் இந்துக்களிற்கு எதிரான கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறையை கண்டித்துள்ளதோடு அதனை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நாயகத்தின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளார்.

இதேநேரம் இலங்கையின் ஆட்சி மொழிகளான தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழுகளிலும் இதனைச் சுட்டி நிற்கும் வரைவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

# இந்திய கோடீஸ்வரர் அதானி இலங்கைக்கு வந்துள்ளார்

## ஜனாதிபதியை சந்திக்கவும் திட்டம்

இந்திய அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திக்க உள்ளார் என இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருவதற்கு அவர் திட்டமிட்டிருந்தார் என உயர்மட்ட அதிகாரிகளை மேற்கோளிட்டு இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி உள்ளிட்ட குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 51 வீத பங்குகளை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழுங்குவதற்கான ஒப்பந்தம் ஒரு மாதத்துக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிலையில் இலங்கையின் துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான திட்டங்களில் முதலிடுவதற்கு அதானி ஆர்வம் காட்டுகிறார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திக்கும் போது இந்த துறைகளில் சாத்தியமான திட்டங்கள் குறித்து அதானி விவாதிப்பார் என்றும் இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# அதிகளவிலான ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பாடசாலை வருகை!





நாடளாவிய ரீதியில் உள்ள சகல பாடசாலைகளினதும் ஆரம்பப் பிரிவுகளின் கற்றல் செயற்பாடுகள் நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பெருமளவான மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளித்துள்ளனர்.

அதன்படி, மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் தரம் 1 முதல் 5 வரையிலான ஆரம்ப பிரிவு வரையில் கல்வி கற்கும் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகம் அளித்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலை சீருடையுடனும் சில மாணவர்கள் சாதாரண ஆடையுடனும் பாடசாலைக்கு சமுகமளித்தனர் என அவர் தெரிவித்தார்.

பாடசாலைக்குச் செல்லும் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு பாடசாலை நுழைவாயிலில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மாணவர்களின் உடல் வெப்பம் அளவீடு செய்யப்பட்டதோடு, ஏனைய சுகாதார நடைமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளன.

மேலும் வீதிப் போக்குவரத்து பிரிவு பொலிஸார் பாடசாலைகளுக்கு முன் விசேட கடமையை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும் தரம் 1 முதல் 5 வரையிலான ஆரம்பப் பிரிவு வரையில் கல்வி கற்கும் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகம் அளித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 100 நாள்களுக்கும் மேலாக தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அதிபர், ஆசிரியர்களும் நேற்று பாடசாலைகளுக்கு சமுகமளித்திருந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

சில பாடசாலைகளில் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் வருகை குறைவாகவே காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முகக்கவசம் அணிதல், கை கழுவுதல், சமூக இடைவெளி உட்பட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு மாணவர்களுக்கு பாடசாலை நுழைவாயிலில் வைத்தே தெளிவுபடுத்தப்படுவதுடன், மாணவர்களுக்கு நோய் அறிகுறிகள் இருந்தால் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேபோல வவுனியா மாவட்டத்திலும் பாடசாலைகளுக்கு கணிசமான மாணவர்கள் வருகை தந்திருந்தனர். சகல மாணவர்களும் சீருடை அணியாமல் சாதாரண சீருடையுடன் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர் எனவும் பாடசாலை வாயிலில் உடல் வெப்பம் பரிசோதிக்கப்பட்டதாவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகளவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் இரு பிரிவுகளாக மாணவர்களை பாடசாலைக்கு வருமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அதேநேரம், யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலையில் மாணவர்களின் வருகை குறைந்த நிலையில் காணப்படுவதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாடசாலைக்கு வந்த மாணவர்களைக் கொண்டு கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்த ஜப்பான் உறுதி

இலங்கையுடனான தனது ஒற்றுமையை மீண்டும் வலியுறுத்திய ஜப்பான், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை வலுப்படுத்துவதாக உறுதியளித்துள்ளது.

ஜப்பானின் இலங்கைக்கான தூதுவர் அகிரா சுகியாமா நேற்று (திங்கட்கிழமை) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார்.

இதன்போது இலங்கையில் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்த ஜப்பானிய அரசாங்கம் 6 லட்சம் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை வழங்கியதற்கு ஜனாதிபதி பாராட்டுத் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையுடன் மேலும் தொடர்பை ஏற்படுத்த விருப்பம் தெரிவித்த தூதுவர், ஜனாதிபதியின் தொடர்ச்சியான ஆதரவுக்கு அவர் நன்றியும் தெரிவித்தார்.

# ஆசிரியர்கள் நாடு முழுவதிலும் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்



அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கு, பிள்ளைகளின் கல்வி உரிமைகளை உறுதிப்படுத்து ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல இடங்களில் நேற்று பிற்பகல் கவனவீர்ப்புப் போராட்டங்கள், பேரணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதிபர் – ஆசிரியர் பேரணி காரணமாக கொழும்பு கோட்டையைச் சுற்றி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அதிபர் – ஆசிரியர் கூட்டு தொழிற்சங்கக் கூட்டமைப்பால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோட்டை ரயில் நிலையம் முன்பு ஆரம்பமாகிய கண்டனப் பேரணி ஜனாதிபதி செயலகம் முன்பாகச் சென்றடைந்தது.

# கோட்டா அரசு மீது மைத்திரி அதிருப்தி!



இரசாயன உரம் இறக்குமதி செய்யத் தடை விதித்த ஆரம்பத்திலேயே, அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு தொடர்பாக அரசுக்கு எடுத்துக் கூறி இருந்தோம். எனினும், எமது கருத்துக்களை அரசு கண்டு கொள்ளவில்லை. அதன் விளைவே தற்போது பாரிய பிரச்சினையாக மாறி இருக்கின்றது.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலன்னறுவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசு இரசாயன உரம் இறக்குமதி செய்யத் தடை விதித்தது கடந்த போகத்தின் ஆரம்பத்திலாகும். இதன் போது ஊடகங்கள் ஊடாக விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டதுடன் விவசாயிகள் மத்தியிலும் அமைதியின்மை ஏற்பட்டு வீதிகளில் சிறிதளவில் போராட்டங்கள் நடந்து வந்தமையை காணக்கூடியதாக இருந்தது.

அரசின் இந்தத் தீர்மானம் நல்லதாக இருந்தாலும் இது அவசரப்பட்டு செய்யக்கூடிய விடயமல்ல என்பதை இதன் ஆரம்பத்திலேயே அரசில் இருக்கும் பொறுப்பு வாய்ந்த அனைவருக்கும் தெரிவித்திருந்தேன்.

விசேடமாக இரசாயன உரத்தில் இருந்து சேதன உரத்துக்கு மாற்றுவதாக இருந்தால் அதனை உடனடியாக மேற்கொள்ள முடியாது. நானும் அமைச்சராக, ஜனாதிபதியாக இருந்து முன்மாதிரி நடவடிக்கையாக சேதன உரத்தில் விவசாயம் செய்தேன்.

அதனால் இந்த நடவடிக்கையை 10 வருடங்கள் அல்லது 5 வருடங்களுக்கான வேலைத்திட்டமாகப் படிப்படியாகவே மேற்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் கூறியிருந்தேன். அதன்பின்னர் எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றக் குழு இது தொடர்பாக அரசில் இருக்கும் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தி இருந்தது.

அத்துடன் உரப் பிரச்சினை மற்றும் அதனால் ஏற்பட்டிருக்கும் கவலைக்குரிய நிலைமைகள் தொடர்பாக தெளிவுபடுத்தி கட்சி என்ற அடிப்படையில் அரசுக்குக் கடிதம் மூலம் அறிவுறுத்த நடவடிக்கை எடுத்தோம். எமது பொறுப்பை நாங்கள் சரியாக அரசுக்குத் தெரிவித்திருந்தோம்.

எனினும், எமது கருத்துக்கள், ஆலோசனைகளை அரசு கருத்தில்கொள்ளவில்லை. அதனால்தான் தற்போது உரப் பிரச்சினை பாரிய பிரச்சினையாக மாறி இருக்கின்றது - என்றார்.

## மன்னாரில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், அவர் இங்கு வருகை தந்துள்ளார்.

கௌதம் அதானியும் அவரின் குடும்பத்தின் சிலரும், இரண்டு தனியார் விமானங்களில் ஞாயிறு இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கௌதம் அதானியின் மகன், **Adani Ports and Special Economic Zone** பிரதம நிறைவேற்றதிகாரி, அதானி பசுமை எரிசக்தி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் உள்ளிட்டோரும் இலங்கைக்கு வந்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி போர்ப்ஸ் சஞ்சிகை வெளியிட்ட இந்தியாவின் செல்வந்த வர்த்தகர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் கௌதம் அதானி உள்ளார்.

துறைமுகம், எரிசக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி செயற்றிட்டம் தொடர்பில் இலங்கையின் உயர் அதிகாரிகளுடன் கௌதம் அதானி கலந்துரையாடவுள்ளதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

அவர், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம் தொடர்பில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடவுள்ளார் எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்திய வர்த்தகர்கள் சிலர் நேற்று மாலை மன்னாருக்கு சென்றுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க, இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் சஞ்சய மொஹொட்டால ஆகியோரும் அவர்களுடன் அங்கு சென்றிருந்தார்

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 51 வீத பங்கை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்கும் உடன்படிக்கை கடந்த செப்டம்பர் 30 ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

**West Container International Terminal** எனும் புதிய கூட்டு நிறுவனமொன்றினூடாக, இந்த மேற்கு முனையத்தின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கு முன்னர், இந்தியா, ஜப்பான் மற்றும் இலங்கைக்கு இடையில் கூட்டுத் திட்டமாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கப்பட்டிருந்ததுடன், தற்போதைய அரசாங்கம் அந்தத் திட்டத்தை நிறுத்தி, மேற்கு முனையத்தை அதானி குழுமம் தலைமையிலான கூட்டுத் திட்டத்திற்கு வழங்கியது.

இதனிடையே, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் **(Japan International Cooperation Agency)** நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் இணைந்து அபிவிருத்தி செய்யும் கொழும்பு துறைமுகத்தின் நுழைவாயிலின் முதலாவது கான்கிரீட் பாலத்தை பொருத்தும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

புதிய களனி பாலத்திலிருந்து காலி முகத்திடல் வரை தூண்களில் நிர்மாணிக்கப்படும் இந்த வீதியில், முன்னரே பொருத்தப்பட்ட கான்கிரீட் பாலத்தின் 3,279 பகுதிகள் பொருத்தப்படவுள்ளன.

நான்கு வழிச்சாலைகளையும், 5.3 கிலோ மீட்டர் நீளத்தையும் கொண்டதாக இது அமையவுள்ளது.

துறைமுக நுழைவாயிலின் அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தினால் துறைமுக வளாகத்தில் இடித்து அகற்றப்பட்ட கட்டடங்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒதுக்கீட்டில் 17 மாடிகளைக் கொண்ட கடல்சார் வசதி நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி 9ஆம் பக்கத்தில்)

# 'மொட்டு'வின் பங்காளிகள் அதிரடி ஆட்டத்துக்கு தயார்



கெரவலப்பிட்டிய 'யுகதனவி' மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள அரச பங்காளிக் கட்சிகள், இது விடயம் தொடர்பில் மக்களை ஓரணியில் திரட்டவும் திட்டமிட்டுள்ளன.

இதற்காக எதிர்வரும் 29 ஆம் திகதி 'மக்கள் சபை' எனும் தொனிப்பொருளின்கீழ் பகிரங்க கூட்டமொன்றை நடத்துவதற்கு 'மொட்டு' அரசுக்கு ஆதரவு வழங்கும் 10 பங்காளிக் கட்சிகள் தயாராகி வருகின்றன.

'யுகதனவி' விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேரம் வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பங்காளிக் கட்சிகளின்தலைவர்கள்கோரிக்கை விடுத்திருந்தாலும் அதனை ஜனாதிபதி நிராகரித்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருடன் இது சம்பந்தமாக பேச்சு நடத்துமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மக்கள் மத்திக்குச்செல்வதற்கு அரசபங்காளிகள் வியூகம் வகுத்துள்ளன.

# பூஸா சிறையில் 21 கைதிகளுக்கு தொற்று உறுதி

**காலி, பூஸா உயர் பாது காப்பு சிறைச்சாலையில் 21 கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது என சிறைச் சாலை அதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.**

**குறித்த சிறைச்சாலையில் 30 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 21 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.**

**தொற்றுக்குள்ளான கைதிகள், அங்குனுகொல பெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அருகிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளனர்.**

## அரசை விமர்சிப்பதை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், விவசாயிகளின் உரம் தொடர்பான பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை, அரசுக்குள் சில தரப்பினருக்கிடையே நிலவும் கருத்து மோதல்கள் தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டன.

இதன்போது, ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின் அது தொடர்பில் வெளியில் விமர்சனங்களை முன்வைக்காது, உள்ளேயே அவற்றை தீர்த்துக்கொண்டு ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார் என்று அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

## நாடாளுமன்றத்தில் கொரோனாத் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், அவர் முகக்கவசம் அணிந்து சுகாதார சட்ட திட்டங்களை சரியாகப் பின்பற்றி நடந்துக்கொண்டுள்ளதால், அவரால் நாடாளுமன்றத்துக்குப் பெரிய அச்சுறுத்தல் இல்லை எனவும் நாடாளுமன்ற படைக்கல சேவிதர் கூறியுள்ளார்.

அவர் நாடாளுமன்றத்துக்கு வந்த நேரத்தில் சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரமே பழகியுள்ளார்.

அதேவேளை, செல்வராசா கஜேந்திரன், இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

கஜேந்திரனுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்டது. அவர் தற்போது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனவும் நாடாளுமன்ற படைக்கல சேவிதர் மேலும் தெரிவித்துள்ளார்.